# விடுதலைப் புலிகளின் மௌனம் கலைகிறதா?

வன்னியில் யுத்த நிலமையானது முற்றிலும் மாற்றமடையத் தொடங்கியுள்ளது. படைத்தரப்பும் எப்படியாவது நாச்சிக் குடாவையும், அக்கராயன் குளம் மற்றும் அதனை அண்டிய பகுதிகளையும் கைப்பற்றி விடவேண்டும் எனும் நோக்கில் தன்னுடைய அதியுச்ச பலத்தைப் பிரயோகிப்பதோடு வன்னியை முழுமையாகக் கைப்பற்ற எதையும் செய்யத் தயாராக உள்ளது. ஆனால் விடுதலைப் புலிகளும் தாங்கள் இதுவரை காலமும் கடைப்பிடித்துவந்த அமைதி கலைந்து பதில் தாக்குதல்கள் தீவிரப்படுத்தியுள்ளனர். ஆகவே வன்னிக்கள முனையில் சடுதியான ஒரு மாற்றம் ஏற்பட்டிருக்கின்றது என்றே கூறவேண்டும்.

கடந்த 1ஆம் திகதி மன்னார் - பூநகரி வீதியில் (ஏ32) முழங்காவிலைத் தாண்டி நாச்சிக்குடாச் சந்திக்குத் தெற்கே உள்ள படையினர். நாச்சிக்குடாச் சந்தியை நோக்கி முன்னேறிய வேளையிலும், அதற்குச் சமாந்தரமாக அக்கராயன் குளத்திற்குத் தெற்கே உள்ள படையினர் அக்கராயன் குளம் மற்றும் வன்னேரி நோக்கி நகர முயன்ற (8,9,மற்றும் 10வது மைல் கல்) வேளையிலும். புலிகளின் கடும் எதிர்ப்பைச் சந்தித்துள்ளனர். (கடந்த சிலவாரங்களுக்கு முன்னர் அக்கராயனைப் பிடித்ததாக படைகள் பொப்பிரச்சாரம் செய்திருந்தனர். இதைக் கடந்த இதழிலேயே நான் குறிப்பிட்டிருந்தேன்.

**அந்த நேரத்தில் படைகளின் இந்த கடுமையான தாக்குதல்களுக்கும் தமது தாய்நிலத்தை தாம் உறுதியுடன் காக்க வேண்டும் என்னும் நோக்குடன் கேணல் பாணுவின் தலைமையிலான விடுதலைப்புலிகள் ஒரு திடீர்ப் பாய்ச்சலை மேற்கொண்டனர்.**

வவுனியா மன்னார் வீதியிலிருந்து படைகள் வடக்கு நோக்கி முன்நகரும் போது அவர்களது ஒடுங்கல் வலயம் அதிகரித்துக் கொண்டே செல்லுகின்றது அதாவது ஒரு கூம்பு வடிவில் படையினரை முன்நகர புலிகள் அனுமதிக்கின்றனர். என்றே கூறவேண்டும். உதாரணமாக வவுனியா முனையில் பாலமோட்டை, பின் வவுனிக்குளம், மல்லாவி, அக்கராயன் குளம் மற்றும் வன்னேரிக்குளம், நாச்சிக்குடாச் சந்தி, என படையினரது ஒடுங்கல் வலயம் நீண்டுகொண்டே செல்லுகின்றது. ஆகவே நாச்சிக்குடாச்சந்தி முதல் அக்கராயனின் தென்பகுதிவரையாக படைகளின் ஒடுங்கல் வலயம் குறுக்கப்பட்டிருக்கிறது. இது எவ்வாறு படைகள் முகமாலையிலே ஒரு ஒடுங்கல் வலயமாக படைகள் அகப்பட்டிருக்கிறார்களோ அதே போல் இங்கேயும் அகப்பட்டிருக்கின்றனர் என்றே சொல்ல வேண்டும்.

ஆகவே இந்த நாச்சிக்குடாச்சந்தி முதல் அக்கராயன் குளத்தின் தென்பகுதிவரையுள்ள படைகள் பாரிய முன்நகர்வு முயற்ச்சியை மேற்கொண்டன. அதாவது இப்பகுதியில் விடுதலைப்புலிகள் அமைத்துள்ள மண் அணையுடன் கூடிய பாதுகாப்பரணை உடைத்துக்கொண்டு நாச்சிக்குடா மற்றும் வன்னேரி, அக்கராயன் ஆகியவற்றைக் கைப்பற்ற முயன்றனர். இதற்காக விமானப் படையின் குண்டு வீச்சு விமானங்கள் கடும் தாக்குதலை புலிகளின் நிலைகள் மீது நடத்த பதிலுக்கு எம்.ஐ.24 ரக தாக்குதல் ஹெலிகொப்டர்களும் இணைந்து தாக்க கடும் ஆட்லரி, மற்றும் பல்குழல் எறிகணைகள் புலிகளின் பகுதிகளைச் சல்லடை போட புதிதாகச் சீனாவிடமிருந்து வாங்கப்பட்ட பதுங்குகுழிகளைத் தாக்கியழிக்கும் நவீன டாங்கி எதிர்ப்பு ஏவுகணைகள் மூலம் விடுதலைப்புலிகளின் பதுங்குகுழிகளைத் தாக்க புலிகளின் முன்னரங்கத்தை ஊடறுத்துக் கொண்டு படைகள் முன்னேற பெரும் முயற்ச்சியை மேற்கொண்டன

**களமுனைப் பதிவுகள்**

**பதிப்பிப்பவர் வன்னியன்**

படைகளின் விசேட கொமாண்டோக்கள் புலிகளின் முன்னரங்கத்தை உடைக்க முயன்றும் முடியவில்லை. இந்தக்கட்டத்தில் மேலதிக படைகளை இந்தப் பகுதிகள் மீது நகர்த்த 57வது தளபதி ஜெகத்டயஸ் மேற்கொண்டார் மேலதிக படைகள் அவ்விடத்தில் வந்தபோது அங்கிருந்த படைகள் உஷாராகி மேலும் புலிகளின் நிலைகள் மீது தாக்க முயன்றன. அந்த நேரத்தில் படைகளின் இந்த கடுமையான தாக்குதல்களுக்கும் தமது தாய்நிலத்தை தாம் உறுதியுடன் காக்க வேண்டும் என்னும் நோக்குடன் கேணல்பாணுவின் தலைமையிலான விடுதலைப்புலிகள் ஒரு திடீர்ப் பாய்ச்சலை மேற்கொண்டனர்.

இதனால் படைகள் தரப்பில் பலர் கொல்லப்பட்டனர். படைகள் தங்கள் கொல்லப்பட்ட சகாக்களைத் பின்நகர்த்துவதற்கு முடியாத அளவுக்குத் தாக்குதல்கள் நடந்தன. நேரம் ஆக ஆக படைகளின் இழப்பு அதிகரித்துக் கொண்டே சென்றது. மேலும் தாம் தாமதித்தால் தமது முன்னணிப் படைப்பிரிவுகளை தாம் இழக்க வேண்டும் என நினைத்த ஜெகத்டயஸ் உடனடியாக படைகளைப் பின்நகர உத்தரவிட்டார்.

அங்கு இறந்த படைகளின் சடலங்களை படைகள் மீட்க முயன்றும் முடியவில்லை. முடிந்த வரை தாம் கைப்பற்றிய சடலங்களுடன் பின்நகர்ந்தனர் காரணம் படைகள் இறந்த தமது சகாக்களின் உடல்களை மீட்டு வந்தால் அவர்களுக்கு ஒரு போணஸ் (சம்பளம்) வழங்கப்படுகிறது. படைகள் வழமையாகத் தமது இழப்புக்களை மறைத்தே வழங்கியுள்ளனர்.

எனினும்? இவ்விழப்புக்களானது தெற்கில் பலத்த அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இதுவரை காலமும் வன்னிக்குள் படையினர் பாரிய முன்னேற்றச் செய்திகளையும், கிளிநொச்சி எந்த நேரமும் கைப்பற்றப்பட்டு விடும் என்ற செய்தியையும் கேட்டுவந்த தென்னிலங்கை மக்களுக்கு இந்தச் செய்தி பேரதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இது அங்கு என்ன நடக்கிறது என்பதை அவர்கள் புரிந்து கொள்ள வாய்பாக இருக்கிறது. இப்படிப்பட்ட பல செய்திகளை இவர்கள் தொடர்ந்தும் கேட்கும் நாள் வெகு தொலைவில் இல்லை.

வன்னிக்குள் ஆழ காலூன்றிவிட்ட படைகள் தமது நடவடிக்கைகளை நிறுத்தவும் முடியாது. வேகமாக மேற்கொள்ளவும் முடியாத சங்கடமான நிலைக்கு வந்துள்ளது என்பதே உண்மை. படைகளின் திட்டமானது பிசுபிசுத்துப் போனது அதாவது நாச்சிக் குடாவைத் தாங்கள் கைப்பற்றினால் தான் புலிகளின் நாச்சிக்குடா - அக்கராயன் முன்னரங்கப் பாதுகாப்பு நிலைகளைத் தகர்க்க முடியும். எனத் திட்டமிட்டிருந்தனர்

**அங்கு இறந்த படைகளின் சடலங்களை படைகள் மீட்க முயன்றும் முடியவில்லை. முடிந்த வரை தாம் கைப்பற்றிய சடலங்களுடன் பின்நகர்ந்தனர் காரணம் படைகள் இறந்த தமது சகாக்களின் உடல்களை மீட்டு வந்தால் அவர்களுக்கு ஒரு போணஸ் (சம்பளம்) வழங்கப்படுகிறது.**

அத்துடன் அக்கராயனூடாக முறிகண்டி நோக்கி நகர்ந்து ஏ9 வீதியைத் துண்டித்து புலிகளுக்கு நெருக்கடியைக் கொடுக்கும் அதே வேளை மல்லாவி மற்றும் வவுனிக்குளம் பகுதிகளிலிருந்து மாங்குளம் நோக்கி நகர்ந்து ஏ9 வீதியை துண்டிப்பதால் பாலமோட்டை, குஞ்சுக்குளம் பகுதியில் கடந்த ஒன்றரை வருடத்திற்கும் மேலாக விடுதலைப் புலிகளின் வியூகத்தை முறியடிக்க முடியாது திணறும் படையினர் அம்முற்றுகையிலிருந்து விடுபட முடியும் எனக் கருதுகின்றனர்.

அத்துடன் படைகள் பொதுவாக பெட்டியடித்தல், அல்லது பட்டியடித்தல் முறைமூலமே இதுவரை காலமும் தமது தாக்குதல்களை மேற்கொண்டனர். ஆனால் இங்கும் தமது தாக்குதல் உத்திகளை மாற்றாது அவ்வாறே மேற்கொள்ளத் திட்டமிட்டனர். அதாவது நாச்சிக்குடாவைக் கைப்பற்ற முடியாவிட்டால் நாச்சிக் குடாவுக்குக் கிழக்கே வன்னேரி, அக்கராயன் ஆகியவற்றினூடாக முன்னேறி அடுத்த கட்டமாக மேற்கு நோக்கித்திரும்பி ஜெயபுரம், பல்லவராயன் கட்டுப்பக்கமாக முன்நகர்ந்து பெட்டியடித்துநாச்சிக்குடாவைக் கைப்பற்ற முயல்கின்றனர். இதன் மூலம் 'L`வடிவில் நகர்ந்து நாச்சிக்குடாவில் நிலை கொண்டிருக்கும் புலிகளை பின்நகர்த்தும் தந்திரோபாயத் தாக்குதலாகவே அமைகிறது.

அக்கராயன் பகுதியில் தரி?த்து நிற்பதாகவும் கிளிநொச்சியை அடைய இன்னும் 12 மைல்கள் தூரம் தான் இருப்பதாகவும் அரசதரப்பு பெருமெடுப்பிலான பரப்புரையை மேற்கொண்டாலும் கூட உண்மையில் அக்கராயனைக் கைப்பற்றி அங்கிருந்து கிளிநொச்சிக்கு நகருகின்ற திட்டம் எதுவும் படைத்தலமையிடம் தற்போதைக்கு இல்லை என்றே சொல்லலாம். காரணம் ஏ9 வீதிக்கு அண்மையாக இராணுவம் நகர்வதை விடுதலைப் புலிகள் கடுமையாக எதிர்ப்பர். எனவே தற்போதைய சூழலில் சண்டை வலுவுடைய முன்னணிப் படைப்பிரிவுகளை கிளிநொச்சி நோக்கி நகர்த்தி பெரும் சண்டைகளை எதிர்கொண்டு படையணிகளைச் சிதைக்க இராணுவத் தலமை தயாராக இல்லை.

எனினும் கிளிநொச்சி நோக்கி நகர்வு என்று ஒரு சிறிய திசை திருப்புத் தாக்குதல் இடம் பெறுவதற்கான சாத்தியமே உள்ளது. இனிவரும் வாரங்களில் கிளிநொச்சி மீது கடுமையான எறிகணைத் தாக்குதல் மூலம் கிளிநொச்சி நகர மக்களை இடம் பெயரச் செய்து கிளிநொச்சியின் இயல்பு நிலையை முடக்கி கிளிநொச்சியைச் சூனியப்பிரதேசமாக மாற்ற முயல்கின்றனர்.

அத்துடன் கடந்த இரு வாரங்களின் முன்னர் பாதுகாப்பமைச்சு வெளியிட்ட அறிக்கையிலே தாங்கள் முறிகண்டியைக் கைப்பற்றி விட்டதாகவும் இன்னும் சில கி.மீற்றர்கள் நகர்ந்தால் ஏ9 வீதியைக் கட்டுப்பாட்டில் கொண்டுவந்து விடுவோம் என்றும் தெரிவித்தனர். உண்மையில் முறிகண்டி என்று மூன்று இடங்களை அழைக்கின்றனர். முதலாவதாக பிள்ளையார் கோயில் உள்ள இடம் திருமுறிகண்டி என்றும், ஏ9 வீதியில் கொக்காவில் சந்தியிலிருந்து 2மைல் தெற்கே மாங்குளப்பக்கமாக அமைத்திருப்பது பழைய முறிகண்டி ஆகும். மூன்றாவதாக அக்கராயன் குளத்தின் நீரேந்துப் பகுதியில் இருந்து நேரெதிரே தெற்குப் பக்கமாக 5 மைல் தொலைவில் உள்ளது காட்டு முறிகண்டி ஆகும்.

இந்த காட்டு முறிகண்டிப் பிரதேசத்திற்குள் இராணுவத்தின் தாக்குதல் குழுவொன்று காட்டிற்குள் நுழைந்துவிட்டு தாங்கள் முறிகண்டிப் பிரதேசத்திற்குள் நுழைந்துவிட்டதாக தம்பட்டம் அடித்திருக்கிறது. இது போலவே அக்கராயனையும் தாங்கள் கைப்பற்றி விட்டதாக பொய்ப் பிரச்சாரம் செய்தது. மேலும் இராணுவம் நுழைந்த காட்டு முறிகண்டியானது. ஏ9 வீதியில் உள்ள முறிகண்டியில் இருந்து தென் மேற்குத் திசையில் 8மைல் தொலைவில் உள்ளது. இங்கு மக்கள் வசிப்பதில்லை.

இவ்விடத்திற்குச் சென்று வருவதற்கு வண்டிற் பாதையைத் தவிர வேறு பாதைகள் இல்லை. அத்துடன இராணுவத்தின் 57 வது பிரிகேட்டைச் சேர்ந்த படையினர் தற்போது நிலை கொண்டுள்ள இடமான துணுக்காய் உயிலங்குளத்திலிருந்து வட கிழக்காக 7 மைல் தொலைவில் உள்ள இந்த காட்டு முறிகண்டி நோக்கி? காடுகளுடாக இரகசியமாக நகர்ந்து நிலைகொண்டு விட்டு தாம் முறிகண்?யில் நிற்பதாகப் பிரச்சாரம் செய்திருக்கிறார்கள். இதைப் பல புலம்பெயர் மக்களும் நம்பியிருக்கின்றார்கள். அத்துடன் திரு முறிகண்டியில் இருந்து ஒரு வீதி பல்லவராயன் கட்டுச் சந்திக்குச் செல்கின்றது. இதிலிருந்து பூநகரியை அடையலாம் எனப் படைகள் திட்டமிட்டே தமது நடவடிக்கைகளை முறிகண்டி நோக்கி முன்னேறுகின்றன.

*(தொடர்ச்சி 34 ஆம் பக்கம்)*

**SRI ATHIPARASAKTHI ASTROLOGY CENTRE**

World Famous Special Astrologist!
Face Reading & Palm Reading



**Sun., Mon., Tue., & Wed,**
10.00 am to 7.00 pm
At One Stop Bargaining Shop
218 High Street, East Ham. E6 2JA

**Thu., Fri.& Sat.,**
10 am to 8.00 pm
311 Ley Street. Ilford, Essex.
IG1 4AA (near Pillaiar Temple)

**S.P. SRIRAM GURJI**
AADIVASI MUKKIYA

இந்தியாவில் ஸ்ரிகாகுளம் மாவட்டம் அருகில் உள்ள அதி பயங்கர வனத்தில் மூன்று குருமார்களிடத்தில் 5 வயது முதல் கானகத்தில் கடும் விரதம் இருந்து கடும் பயிற்சி செய்து 10 வருடங்கள் ஜோதிடம், வாஸ்து, குரு மந்திரங்கள் மூலம் பில்லி சூனிய நிவரத்தி ஆகியவைகள் கற்று இந்தியாவில் பல பிரபலங்களுக்கு ஜோதிடம் பார்த்து அவர்கள் பெரிய பதவியை அடைந்துள்ளார்கள். பல நாடுகளுக்குச் சென்று வியாபார நோக்கு இல்லாமல் சேவை மனப்பான்மையுடன் மக்களுடைய பிரச்சனைகளைத் தூர்த்து வருகின்றார்.

உத்தியோக பிரச்சினை, குடும்ப உள் விவகாரம், நிதி நிலை விவகாரம், கோர்ட் விவகாரம், எதிரிகள் தொல்லை, விசா பிரச்சினை, வியாபார முன்னேற்ற மின்னை, பில்லி சூனியம், மற்றும் எல்லாவித பிரச்சனைகளையும், மூலிகை மருந்து மூலமும், ஆயுர்வேத மருந்து மூலமும், டாக்டர்கள் குணப்படுத்த முடியாத வியாதிகளையும், மனப்போராட்டங்களைப் போக்கச் செய்வார்.

இவர் பல நாடுகளுக்குச் சுற்றி இலண்டனுக்கு வந்துள்ளார். சிலகாலமே இங்கு வசிப்பார். அதற்குள் நீங்கள் அவரைத் தொடர்பு கொண்டு உங்கள் பிரச்சனைகளைக் கூறிப் பரிகாரம் தேடுங்கள்.



திருமண பொருத்தம் பார்த்துக் குறிப்பு கொடுக்கப் படும்.

Mob: **07918 808 855**
**07506 933 790**

Spoken languages: Tamil, Telugu, Hindi, kannada & English.